ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணு 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 11. 29—3—53 இதழ் 39

"வந்தேமாதரம்" கசக்கிறது!

"வந்தேமாதரம்"

"சரி! சரி!! போ—போ"

"இரண்டு வருடமாச்சு!"

"ஆமாம், போ! போ!!"

"ஏன் இப்படிக் கோபிக்கிறீர்?"

"வந்தேமாதரத்தை அறிவேன் நான். அது வளர்க்கும் வம்பையும் அறிவேன்"

"வந்தேமாதரம்—காங்கிரஸ் ஏடு"

"பெயரே தெரிவிக்கிறது! ஆனாலும் நாங்கள் விரும்பவில்லை"

"காரணம்?"

"அது எங்களைக் கண்டிக்கிறது"

"நியாய ரீதியாக எழுதுவது தானே பத்திரிகாதர்மம்"

"தெரியும் எமக்கு. அதனைக் கடைப் பிடித்து, வந்தேமாதரத்தைக் காப்பாற்றும். எம்மிடம், வாரீர்!"

*

'வந்தேமாதரம்'—பம்பாயில் நடைபெறும் தேசிய ஏடு. அதற்கு சர்க்காரின் விளம்பரங்களெதையும் தாமுடியாதென்று மறுத்துவிட்டார், பம்பாய் சர்க்கார் மந்திரி மொரார்ஜி தேசாய்.

அதோடு, 'டைம்ஸ் ஆப் இந்தியா' போன்ற வேறு சில பத்திரிகைகளுக்கும் எவ்வித விளம்பரமும் தாமுடியாது என்று அவர் மறுத்திருக்கிறார்.

மொரார்ஜி தேசாய், காங்கிரஸ் தியாகிகளில் ஒருவர். அவருக்கு, 'வந்தேமாதரம்' இதுபோது கசக்கிறது. காரணம்—'வந்தேமாதரம்' காங்கிரசின் ஊழல்களைக் கண்டிப்பதால்.

இதனையும், அவர், ஒளிவு மறைவின்றி உரைத்திருக்கிறார்.

அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டுத் தலைவராம் ஏ.டி. மணி என்பாரும், பம்பாய் சர்க்காரின் இப்போக்கினைக் கண்டித்து, அறிக்கை விடுத்துள்ளார்.

'வந்தேமாதரம்' போன்ற ஏடுகளுக்கு, சர்க்கார் விளம்பரம் முதலியவைகளை அனுப்பாமல், தனது ஆத்திரத்தைக் காட்டி வருகிறது.

இது ஏன்?—கேட்கிறது, வந்தேமாதரம். பழைய உரிமை—பழைய பாசம்—பழைய தொடர்போடு இதனைக் கேட்கிறது.

பம்பாய் காங்கிரஸ் சர்க்காரோ, புதுத் துணிவு—புது அதிகாரம்—புதுத் திமிரோடு பதில் தருகிறது.

சர்க்கார் விளம்பரம் தர விரும்பவில்லை!

ஏன்?

சர்க்காரைக் கண்டித்து எழுதும் பத்திரிகைகளுக்கேன், நாங்கள் விளம்பரம் தரவேண்டும்.

தெளிவாகத் தெரிவிக்கிறார்—சர்க்காரை ஆதரிக்கவில்லை, வந்தேமாதரம்; அதற்கு சலுகையேன்? என்று கூறுகிறார், மொரார்ஜி தேசாய்.

இந்தப் பதிலைக் கண்டித்து, 'நமது' ஏடுகளாம் தினமணியும், மித்திரனும், 'கார்ட்டூன்' மூலமும் தலையங்கம் தீட்டியும் தமது கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றன.

ஆட்சியிலிருக்கும் சர்க்காரின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்வது தவறு?

தவறென்றால், எங்ஙனம் ஜனநாயகம் தழைக்கும்?

பழி வாங்கும் போக்கு சர்க்காருக்கு ஏற்படலாமா?

சின்னத்தனமில்லையா, இது!—தேசத்தை நிர்வகிப்பவர்களுக்கு வரலாமா?

இவ்விதம் கேட்கின்றன, 'நமது' ஏடுகள்.

"என்னைப் பாராட்டி எழுதினால் பாராட்டும் பரிசும் அளிப்பேன்—குறை கூறி எழுத ஆரம்பித்தால் சட்டத்தால் கொட்டுவேன்—தடைகளையெல்லாம் போடுவேன்"—என்று ஒரு சர்க்கார் தெரிவிக்குமானால், அந்தச் சர்க்காரைக் குப்பைத் தொட்டியினும் கேடாகத்தான் மதிப்பர், மக்கள்.

விமர்சனம் வரைவதும், குறைகளை எடுத்துக் கூறுவதும், மக்களின் தேவைகளை விளக்குவதும், அக்கிரமங்களை அரசினர் கண்களுக்குக் கொண்டுவருவதும், அதனைக் களையுமாறு வற்புறுத்துவதும், தவறினால் கண்டிப்பதும், சரிவர நடந்தால் பாராட்டுவதும், பத்திரிகைக்காரர்களின் கடமையாகும்.

இந்தக் கடமைகள் பத்திரிகைகளுக்கிருப்பதனால்தான், ஏடுகள் மக்களின் குரல்கள்' என்று கூறுகிறார்கள்.

இந்தக் குரலை, என்கையில் வைத்திருப்பேன் — என்னைப் பாராட்டுவது தவிர வேறேதும் செய்தால் குரலை அமுக்குவேன் என்றெல்லாம் அரசுப் பொறுப்பேற்றோர் தெரிவித்தால், சர்வாதிகாரிகள் ரூபத்தில் சர்க்காரை நடத்துவோர் வளர்கின்றனர் என்று பொருளாகும்.

எனவேதான், பம்பாய் அமைச்சரின் போக்கைக் காரசாரமாகக் கண்டிக்க முன்வந்த இவைகளைப் பாராட்டுகிறோம்.

"அதோ பார்! குடிகாரன்!!" என்று எதிரே செல்லும் குடிகாரனைப் பார்த்து, பூப்போட்ட கிளாசும் அதிலே புதாக மதுவும் வைத்துக்கொண்டு தள்ளாடுவோன் கூறினால், அதனை எந்த 'ரகத்தில்' வைத்து மதிப்பிடுவோமோ, அது போல்; பம்பாய் அமைச்சரைக் கண்டிக்க முன்வந்த தேசிய ஏடுகளின் நிலை இருந்து வருவதை நாம், குறிப்பிடாமலிருப்பதற்கில்லை.

மக்கள் குரல்களைச் சர்க்கார் அமுக்கக்கூடாது — வந்தேமாதரத்தைப் புறக்கணித்தது தவறு — டைம்ஸ் ஆப் இந்தியாவுக்கு விளம்பரம் தராததேன்?—என்று, இவைகள் கேட்கின்றன.

பத்திரிகாதர்மம் குறித்து காரசாரமாக எழுதுகின்றன.

காங்கிரஸ் ஆட்சியின் 'டமாரம்' ஆக இல்லாமல், அக்கிரமத்தைக் கண்டிக்க முன்வந்தமைக்காக, இந்த ஏடுகளின் கண்ணியத்தை எவரும், மெச்சத் தவறார்.

இந்த அரசியல் கண்ணியம் வளரப்படவேண்டுமென்பது, நம்முடைய தீராத ஆசையாகும்.

ஆனால், இந்தக் கண்ணியம் 'குறிப்பிட்ட' அளவோடு நின்றுவிடக் கூடாது.

தனக்கென்றால், ஒன்று! பிறருக்கென்றால் மற்றொன்று!! — எனும் பேத மனம், சூதனுக்கும் சூழ்ச்சிக்காரனுக்கும்சொந்தமானது. வந்தேமாதரத்துக்கு வம்புவந்ததும், பம்பாய் சர்க்காருக்கு 'பத்திரிகா தர்மம்' போதிக்க முன்வந்த இந்த ஏடுகள், நமதியக்க ஏடுகளுக்கு சென்னை சர்க்காரால் 'ஜாமீனும்', 'தடை'யும் பிறப்பித்தபோது, எங்கேபோயின?

தர்பார்

எதேச்சாதிகாரம்

ஜனநாயகத்தைக் கோல்லும்

போக்கு

இந்த வார்த்தைகளை, 'வந்தேமாதரத்துக்கு' தீம்பு வருகிறதென்றதும் வீச முன்வந்த இந்த ஏடுகள், நாம் அல்லலுக்கு ஆளானபோது, துரும்பளவு அனுதாபமும் காட்ட முன்வாராததேன்? பம்பாய்ச் சர்க்காரைச் சீறுகின்றனர் — அது தவறெனக் கூறோம்—தர்பார் முறையில் செல்லும் செருக்கு அடக்கப்படவேண்டியதுதான். ஆனால், பம்பாயில் மொரார்ஜிதேசாய் இருப்பது போல, இங்கே ஒருவரும் இல்லையா! அங்கே, பத்திரிகைகளுக்கு ஆதரவு தர மறுத்ததுபோல இங்கே மறுப்போர் இல்லையா!!

பம்பாய் அரசினர், மேற்கண்ட பத்திரிகைகளுக்கு சர்க்காரின் விளம்பரங்களைத் தர மறுத்தனர்.

அதனைக் கண்டிக்கின்றனர், அகில இந்திய பத்திரிகாசிரியத் தலைவரும் நமது ஏடுகளும்.

"எம்மைக் கண்டித்து எழுதும் ஏடுகளுக்கு எதற்காக விளம்பரம் தருவது?" என்றார், மொரார்ஜி தேசாய்.

அதற்கும் சரியான சாட்டையடி தந்திருக்கின்றனர்.

ஆனால், அதே 'பம்பாய் தர்பார்' இங்கே நடக்காமலிருக்கிறதா? — சென்னை சர்க்கார், இங்குள்ள எல்லாக் கட்சிப் பத்திரிகைகளையும் ஒரே கண்கொண்டு பார்க்கிறதா? நமதியக்க ஏடுகளுக்கு, ஒரு முறை கூட, சர்க்கார் சம்பந்தமான விளம்பரங்கள் வந்தது கிடையாது. ஒரு பத்திரிகையை வளர்த்து வாழ வைப்பது — விளம்பரங்கள்தான். ஆனால், சர்க்கார் விளம்பரங்கள் அனைத்தும் 'சாதாரண' தேசிய இதழுக்குக்கூட அளிக்கப்படுகிறது. ஆனால், தமது போக்கைக் கண்டிக்கும் எதிர்க்கட்சிகளின் ஏடுகளுக்குத் தரப்படுவதில்லை.

இது ஏன்?—இதுவரை கேட்டதுண்டா இந்தத் தேசிய ஏடுகள்.

சில தேசிய ஏடுகளுக்கு — காங்கிரஸ் சர்க்காரின் மறைமுகமான ஆதரவுகூட உண்டு.

ஆனால் நமக்கு?— சாதாரண விளம்பரமும் தருவதில்லை!

காரணம், நாம் சர்க்காரின் குறைபாடுகளைக் கூறுவதால்;

இது அக்கிரமம் என்று இவைகளுக்குப் படாததேன்?

மக்களின் வரிப்பணத்தை,தேசீய ஏடுகளுக்குமட்டும் இந்த சர்க்கார் பங்கு போட்டுத் தருகிறது—பலவழிகளில். ஆனால் நமக்குமட்டும் நியாய

(6-ம் பக்கம் பார்க்க)

"நம்ம ராஜா!"

"காமன் வெல்தில் சேர்ந்திருப்பதால், வெள்ளைக்காரர்களின் நன்மை தீமைகளையும் நாம் தாங்க வேண்டியிருக்கிறது—"

தோழியர் சுசேதா கிருபளானி, டில்லிப் பார்லிமெண்டில், இவ்விதம் விளக்கினர்.

பதிலளித்த பண்டிதரோ, "இப்படியெல்லாம் பேசக்கூடாது. எவருக்கும் கட்டுப்பட்டவரல்ல நாம்" என்று சீறினர்.

25-ந்தேதி, அவருடைய கூற்றுக்குப் பதில் தருவது போல ஒரு செய்தி வந்துள்ளது.

"சீனாவுக்கு முக்கிய பொருள்களை வெளிநாடுகள் அனுப்பலாகாது"—என்று, அமெரிக்காவும் பிரிட்டனும் கூடிப்பேசி முடிவு செய்திருக்கின்றன.

அமெரிக்காவின் பேச்சை பிரிட்டன் கேட்டுக் கொண்டது.

தனக்குக் கட்டுப்பட்ட நாடுகளுக்குத் தன்னுடைய தாக்கீதை அனுப்பிவைத்திருக்கிறது — பிரிட்டன்.

"இந்தியா—பாகிஸ்தான்—இலங்கை முதலிய நாடுகள் சீனாவுக்கு முக்கிய பொருள்களை அனுப்பாமலிருக்கவேண்டும்" என்று, பிரிட்டன் சுற்றறிக்கையொன்று விடுத்திருக்கிறது. இதற்கு பண்டித நேரு எத்தகைய பதிலளிக்கப் போகிறாரோ, அறியோம் நாம்.

ஆனால், "காமன்வெல்த் என்றால், நாம் கட்டுப்படவேண்டியதில்லை" என்று அவர் கர்ஜித்தாரே, அதை நினைவூட்ட விரும்புகிறோம்.

'ஆற்றில் ஒருகால்—சேற்றில் ஒருகால்' — என்பார்கள். இதனையே, 'கரண்ட்' எனும் ஆங்கிலத் தாளில், சித்திரமாகத் தீட்டியிருந்தார், ஒரு ஓவியர்.

சீட்டுக்கட்டிலே, ராஜா உருவம் போட்ட சீட்டு இருக்கிறதல்லவா? இரண்டு பக்கமும் ஒரே விதமான தலைகளிருப்பதாக! அந்த 'ராஜா'வைப் போன்றவர் பண்டிதநேரு. ஒரு பக்கம், அமெரிக்காவுக்கு! மற்றோர் பக்கம் ரஷ்யாவுக்கு!! — காட்டிக்கொண்டு சீட்டுபோலக் கிடக்கிறார். சீட்டை, எவரும் எடுத்து விளையாடலாம் போலும்!

ஏஜண்டுத் தோழர்களுக்கு

மார்ச் மாதத்தோடு இவ்வாண்டுக் கணக்கு முடிக்கவேண்டியிருப்பதால், பாக்கி வைத்திருக்கும் ஏஜண்டுகள், முழுத்தொகையையும் 5—4—53க்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவது 5—4—53 முதல் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி.

திராவிட நாடு

காஞ்சி] 29—3—53 [ஞாயிறு

ஆந்திரப் புது அரசு

★

"காட்டைப் பிரிப்பதா? என்ன அநியாயம்! ஆகுமாய்யா, இது! அக்கிரமமாகப் பேசுகிறார்களே!!"

"இதுவரை இருந்து வந்த தொடர்பு என்னாகும்? ஏனிந்தப் பேத மதி! பிரிவினையே கூடாது! கூடாது!!"

"ஐக்கிய மனோபாவம் வேண்டும்—சிதறுண்டு போவதோ, நாம்? அனைவரும் இந்தியரன்றோ!"

*

நாடுகள் பிரிக்கப்பட்டு, புது எல்லைகள் வகுக்கப்பட்டு, அதிகார மாற்றம் செய்யப்படல்வேண்டும் என்று நம்போன்றோர் கூறும்போதெல்லாம், இங்ஙனம் சீறுவோர் உண்டு.

பிரிவினை என்றால், நம்முடைய தாயகத்தை இந்திய உபகண்டத்திலிருந்து வெட்டி யெடுத்து வேறு எங்கோ எடுத்துக்கொண்டு செல்ல விரும்புகிறோமெனும், தவறான கருத்தில் குழம்பும் தேசிய நண்பர்களும் இருக்கிறார்கள்.

அவர்களுட்பட, எல்லோரும் மகிழும் விதமாக ஆந்திரப் புது அரசு பற்றிய 'அறிவிப்பு' டில்லியிலிருந்து வந்துவிட்டது.

ரணகளம்! ரத்தம் ஆறாகப் பெருகவேண்டும்! ஆகஸ்டை ஆரம்பிப்போம்!—என்கிற முழக்கங்களுக்கெல்லாம் 'வேலை' தராது, ஒரு சிறு அறிவிப்பின்மூலம், ஆந்திரப் புது அரசு அமையப்போகிறது.

வரும், அக்டோபர் முதல் நாள், ஆந்திர மக்களின் புது அரசு தினமாகுமாம்—பண்டிதர் அறிவித்திருக்கிறார்.

சென்னை மாநிலத்தின் ஒரே ஆட்சியின்கீழிருந்தது போலில்லாமல், ஆந்திர மக்களுக்கு ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டினம், கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், கர்னூல், அனந்தப்பூர், கடப்பை, சித்தூர் முதலிய பதினொரு மாவட்டங்கள் அடங்கிய ஆந்திர நாடு, அரும்பப்போகிறது.

அதற்கென ஒரு தலைநகரும், ஆட்சியமைப்பும் ஏற்பட்டுவிடப் போகின்றன.

இந்தச் சம்பவம், சரித முக்கியத்துவம் வாய்ந்ததுமட்டுமல்ல — 'பிரிவினை' யென்றால், பயம், ஆத்திரம், கோபம் அத்தனையையும் காட்டும் நண்பர்களுக்கோர் பாடமாகவும் அமையும்.

எல்லைகளை வகுப்பதும், தனி அரசை ஏற்படுத்துவதும், சாதாரணமாக நடைபெறக்கூடிய சம்பவங்களே ஒழிய, நண்பர்கள் கருதுவதுபோல, அது ஓர் பயங்கர நிகழ்ச்சி அல்ல.

*

ஆந்திரப் புது அரசு அமைப்பால் டில்லி மூலவரின் கை, மென்மேலும் வலுப்பெறும் வாய்ப்பு, அதிகமாகியிருக்கிறது. ஏனெனில், கிடைத்திருப்பது புது அரசே ஒழிய தனி அரசு அல்ல!

தனியரசுக் கோரிக்கையாகயிருந்தால், டில்லிபீடம், இவ்வளவு எளிதில் இணங்கியிருக்காது.

புது அரசு பெற்றுவிட்டார்கள்! பெரிய நிலப்பரப்பு — இரு கூறுகளாக ஆக்கப்பட்டுவிட்டது. இரண்டு சர்க்கார்கள்! இரண்டு கவர்னர்கள்!!—டில்லிக்கு வேலைச்சுமை, குறைந்துபோயிருக்கிறது — அதிகாரம் செலுத்த ஓர் புது மந்திரி சபையும் இனிமேல் கிடைக்கும்.

எனவே, புது அறிவிப்பு மூலம், டில்லிக்கு எவ்விதத்திலும் நஷ்டமில்லை—இலாபம்தான்.

ஆந்திரச் சகோதரர்களின் தலைவர்களும், தமக்கென ஆள்வதற்கு ஓர் அரசினைப் பெற்றுவிட்டார்கள். அவ்வளவுதானேயொழிய, அந்த அரசின்பிடி டில்லியிடம்தான், எப்பொழுதும் இருக்கும்.

*

"ஆந்திரர் புது அரசு பெற்றுவிட்டார்களே-திராவிடநாடு கோரிக்கை என்னவாகும்?" என்று சிலர்கேட்கலாம். இந்த 'அறிவிப்பு'மூலம் திராவிடநாடு பிரச்னைக்கு, எவ்வித ஊறும் ஏற்பட்டுவிடவில்லை.

மொழிவாரி மாகாணப் பிரிவினையை நாம், ஆதரித்தே வந்துள்ளோம். அந்தந்த மொழிவழி வட்டாரங்கள், தமக்கென ஓர் தனியாட்சியை வைத்துக்கொண்டு, அவை யாவும் ஒன்று சேர்ந்து சில பொது விஷயங்களுக்காக கூட்டாட்சி முறையை நடத்தவேண்டுமென்பதே நமது கோரிக்கை என்பதை சென்னை தி. மு. க. முதல் மாநில மாநாட்டில் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

கூட்டாட்சி (Federal) முறைக்கும் இன்றைய டில்லி சர்க்காரின் ஐக்கியஆட்சி (Unitary) முறைக்குமுள்ள வித்தியாசங்களைப் பன்முறை விளக்கி வந்துள்ளோம். கூட்டாட்சியில் அவரவர்களுக்கான சுதந்திரமும் அதிகாரமும் உண்டு! ஐக்கிய ஆட்சி முறையில் அதிகாரம் சுதந்திரம் யாவும் மத்திய சர்க்காரிடம்தான் இருக்கும்!!

பிரகாசம் முதலியோரைக் காங்கிரஸ் தலைமையினர் கலந்து பேசுகின்றனர் என்கிற செய்திகள் வந்ததுமே, 'டில்லி'யின் முடிவை, நாம் எதிர்பார்த்தோம். கலங்கிப்போயிருக்கும் பாசீசக் கோட்டையை ஆந்திரத்தில் வலுப்படுத்தவேண்டிய, நெருக்கடி, டில்லித் தலைமைக்கு இப்போது அதிகமாகியிருக்கிறது. பிரகாசம் போன்றோர் காங்கிரசிலிருந்து விலகியதன் விளைவாக, ஆந்திரக் காங்கிரஸ், சிதறிக்கிடக்கிறது. அதனால், கம்யூனிஸ்டுகளின் பலம் வளர்ந்து கிடக்கிறது! இதனைச் சமாளிக்க ஒருபுதுவழிகாணும் சூழ்நிலை, டில்லி பீடத்துக்கு உண்டாயிற்று. அதனால்தான், ஆந்திர அரசு, அரும்புகிறது! பிரகாசம்—காங்கிரஸ் உறவோடு, அரசுக் கட்டிலேறலாம்!! டில்லியும், தன் ஆதிக்கம் தளராதபடி, பார்த்துக்கொள்ளலாம்.

*

ஆந்திர அரசு அறிவிப்புபற்றி, சில பிரச்சனைகள் இருக்கின்றன.

எனினும், மொத்தத்தில் இப்பிரிவினையை நாம் வரவேற்கிறோம்.

'புது எல்லை!'—என்றால், ஒரு புதிர்போலக் கருதிடும் தேசிய அன்பர்களின் கண்ணை, இந்தப்பிரிவினை, திறந்து வைக்குமாக.

ஆந்திரச் சகோதரர்களை வாழ்த்தும் இந்நேரத்தில், ஒரு முக்கியமான விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

ஆந்திரர்—தமிழர், என்கிற பேத உணர்ச்சிகளைக் காட்டி, அரசியல் குட்டையைக் குழப்பி, சுயலாபம் பெறும் சூதெண்ணம் கொண்டோர் இருபக்கத்திலும் இருக்கிறார்கள்.

இந்தச் சுயநலமிகளின் விஷப் பேச்சில், இரு சாராரும் மயங்கிவிடக் கூடாது. ஆந்திரச் சகோதரர்கள் புது ஆட்சி பெறுகிறார்களேயொழிய, தனி ஆட்சி அல்ல.

இந்தப் புது ஆட்சியால், நாம் வேறு அவர்கள்வேறு ஆகிவிட மாட்டோம். வடவருக்கும் நமக்கும் இருக்கின்ற பேதமல்ல — ஆந்திரச் சகோதரர்களுக்கும் நமக்கும் இருப்பது, மொழி, ஒன்றுதான் — அதுவும் நமது சகோதர மொழிதான். ஆகவே, இந்த நேரத்தில், தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு ஆந்திரச் சகோதரர்களுடன் பகைமை காட்டுவதோ, எரிச்சல் கொள்வதோ, ஆபத்தாகும்.

அவர்களும் நாமும், எப்போதும் சகோதர பாசத்தோடு வாழவேண்டியவர்களாகும். இன்றில்லையெனினும் ஒரு நாள்—நமது கூட்டாட்சியில் அருகருகே, நாம் அமர்ந்திருக்கவே போகிறோம். அந்த இன்ப நாளே, ஆந்திரத்தில் தனியரசைக் கோரும் நாள்! அந்நாளே முழு இன்பம் தரும் — நமக்கும், அவர்களுக்கும். அந்நாளை நோக்கி, நாம் சென்றுகொண்டிருப்போம்!

★

செய்யட்டும்

"கைத்தறித் துணியின்மீதுள்ள விற்பனை வரி ரத்து செய்யப்படுமா?" என்று சென்னை சட்டசபையில் தோழர் பிரகட கோட்டையா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் பட்டாபி ராமராவ், "சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது"—என்பதாகப் பதிலளித்துள்ளார். சர்க்காரின் பரிசீலனை!—இந்தச் சொல், ஆட்சியிலிருப்போருக்கு, சர்வ சாதாரணமானதாகும். இந்தச் சொல்லை வீசி மக்களின் கவனத்தையும் சட்டசபை உறுப்பினர்களின் வாயையும், அடக்க முடியும். அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே அன்பர் அமைச்சர் பதிலளித்திருப்பது காண வருந்துகிறோம்.

கைத்தறித் துணிகளின்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த விற்பனை வரியை நீக்கினால், துணிகளை விற்று வாழவேண்டியிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ, பெரியதோர் உதவி செய்ததாக ஆகும்.

இதனை வலியுறுத்தி, நாமும் பிறரும் பல தீர்மானங்களை, அரசியலாருக்கு அனுப்பி வந்துள்ளோம்.

இருந்தும், சர்க்காரின் அமைச்சர் 'பரிசீலனை'யிலிருப்பதாகப் பதிலளித்துள்ளார். இந்த 'பரிசீலனை'யை விரைவில் முடித்து, மேற்படி வரியினை ரத்து செய்யுமாறு வலியுறுத்துகிறோம்.

✲

'தேனி' தீர்ப்பு

"காங்கிரஸ் பாசிச வெறியினை உணர்த்தும் சொல்லன்றோ, அது?" என்று 'தேனி' என்கிற வார்த்தையைக் கேட்கும், அரசியல் வாழ்வினர் கூறுவர்.

அந்தளவுக்கு, தேனியில் நடைபெற்ற திருவிளையாடல் குறித்து நாடு அறியும்.

நண்பர் நெடுஞ்செழியன் அவர்களை அரிவாளுக்கு இரையாக்கத் துணியுமளவுக்கு நெஞ்சுரம்படைத்தோர் திட்டமிட்டுச் செய்த 'சதி' அன்றையதினம் அங்கே நடைபெற்ற சம்பவங்களை அறிந்தோர் உணர்வர்.

அத்தகைய 'ஏற்பாடு' நடைபெறப்போவதை அறிந்து தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லையென அப்போதைய உள்ளூர் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், துண்டு வெளியீடுகள்மூலம்தெரிவித்துக்கொண்ட செய்தியையும் நாடு அறியும்.

கத்தி! கம்பு! அரிவாள்! கல்! இத்தனையும் ஏந்தி, மாலைநேரத்தில் நமது பொதுக்கூட்டத்தில் புகுந்து கலகம் விளைவித்த காட்சி — இன்னும், கண்முன்னால் நிற்கிறது.

அந்த கோரசம்பவத்தின் 'திரைமறைவில்,' பெரிய பெரியகாங்கிரஸ் தலைவர்களுக்கும் தொடர்பு உண்டென்று, அதற்குப் பிறகு ஆளவந்தார் மேற்கொண்ட நடவடிக்கைகளால் நாடு அறிந்திருக்கிறது.

கலகக்காரர்களை கையும் மெய்யுமாய்ப் பிடித்த அதிகாரிகள்மீது 'அம்பு' வீசப்பட்ட நிகழ்ச்சியை, அனைத்திந்தியாவுமே கண்டித்தது.

அவ்வளவு தூரம், மக்கள் மனதைக்கவர்ந்த 'தேனி' கலவரத்தின் வழக்கு முடிவடைந்துவிட்டதாக அறிய வருகிறோம். மதுரை ஜில்லா போர்டு தலைவர் தோழர் N. R. தியாகராஜன் மற்றும் 32 காங்கிரஸ்காரர்கள்மீது, தொடரப்பட்ட வழக்கில், அண்மையில் மதுரை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் S. தியாகராஜ அய்யர், தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

அதன்படி காங்கிரஸ்காரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தச் செய்தியை 'தேனி' சம்பவம் குறித்து நன்கறிந்திருப்பதோடு முன்னேற்றக் கழகம் தாங்கிக்கொண்டிருக்கும் அம்புகளைக்கண்டு அனுதாபமும் ஆதரவும் காட்டி வரும், மக்கள் மன்றத்துக்குச் சமர்ப்பிக்கிறோம்.........

★

சி. என். ஏ. உடல் நிலை

பொதுச்செயலாளர் சி. என். ஏ. மார்பு வலியின் காரணமாக, சென்னையில் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறார். குறைந்தது இரண்டு மாத காலத்துக்கு கட்டாயமாக ஓய்வு பெற வேண்டுமென்று டாக்டர் வலியுறுத்தியுள்ளார். அவரது துணைவியாருக்கும் உடல் நலமின்மையால் சென்னை டாக்டர் எ. லட்சுமணசாமி முதலியார் நர்சிங் ஹோமில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

வருந்துகிறோம்

நமது நண்பரும், இயக்கத் தோழருமான தோழர் சேலம் சித்தையன் அவர்களின் துணைவியார் இலட்சுமி அம்மாள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். துணைவியாரைப் பிரிந்து வருந்தும் தோழர் சித்தையன் அவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றோம்.

காஞ்சியில்

சின்னக் காஞ்சிபுரம் வரதுவாசல் தெரு அறிவு வளர்ச்சிக் கழக (தி. மு. க. கிளை) முதலாண்டு விழா 29-3-53 ஞாயிறு மாலை 6 மணிக்கு நடைபெறும். தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் கலைஞர் மு. கருணாநிதி, நடிகச் செல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தினால்......!

அவன், தந்தை — கொலையுண்ட நான்கு குழந்தைகள் அவனுடையவை—அதுவும் அவனாலேயே கொலையுண்டன.

கொடுமை என்று அனைவரும் கூறுவர், இதனை.

தான் பெற்ற செல்வங்களை—தான் வளர்த்த சேய்களை—அவைகள் சிரித்தால் மகிழ்ந்து, வாடினால் வருந்தி, வளர்த்த தந்தை கொன்றான்.

என்ன விசித்திரம் என்பீர். விசித்திரமல்ல — வேதனை தரும் உண்மை நிகழ்ச்சி. ஈரோடு தாலுக்காவைச் சேர்ந்த கருமகவுண்டன் பாளையத்தில் நடைபெற்றது, இது.

தவறிழைத்த குழந்தைகளை, தண்டித்துத் திருத்தும் உரிமை பெற்றுள்ள தந்தை கொன்றிருக்கிறான்—குழந்தைகள் கொடுமை புரிந்தன, குற்றமிழைத்தன என்று அல்ல—அவைகளின்மீது வைத்திருந்த வாஞ்சைக்காகவும், மாறாத அன்புக்காகவும். மக்கள்மீது கொண்டிருந்த பாசம்—அவனைக் கொலை செய்யத் தூண்டியது—கொலைகாரனாக்கிற்று.

'மரண தண்டனை'—என்று கோர்ட்டார் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

"மரண தண்டனை இவனுக்குப் போதாது — சித்திர வதை செய்ய வேண்டும் இவனை—அதுவே இந்தக் கொடுமையாளனுக்கேற்ற சரியான தண்டனை!" — நீதி அளிக்கும் பொறுப்பு தங்களுக்குத்தான் உண்டு என்பதாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள், கூறுவது.

"பெற்ற குழந்தைகளையே கொன்றானே, பாவி—அவன் தந்தையா? பெரும் அரக்கன்!" இப்படிப் பேசுகிறார்கள், சிலர்.

"எப்படியய்யா மனந் துணிந்தது இந்தப் பாவிக்கு?" இந்த நற்சாட்சிப் பத்திரத்தை நல்குகிறார்கள், இரக்கம் தங்களுக்குமட்டும் இருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள்.

"ஆம்—நான்தான் கொன்றேன்! நான் அரக்கன்—கொடியவன்—இரக்கமற்றவன் — எப்படி வேண்டுமானாலும் என்னைக் கூறுங்கள், ஏசுங்கள் —எனக்குக் கவலையில்லை. என் நிலையை அறியாத, அதன் தூய்மையினை உணராதவர்கள் எதைக் கூறினால் எனக்கென்ன கவலை? நான் குற்றவாளிதான்! தண்டிக்கப்படவேண்டியவன்தான்! ஆனால்......? எந்த அன்பின் காரணமாக என் குழந்தைகளை இதுவரை வளர்த்தேனோ, மகன் பிறந்தான் எனக் கேள்வியுற்றதும் நான் கொண்ட மகிழ்ச்சிக்கு எந்தப் பாசம் தூண்டுகோலாக இருந்ததோ, அதே அன்பின்—அதே பாசத்தின் காரணமாகத்தான், என் குழந்தைகளை நானே கொன்றேன். ஒப்புமா இதனை இவ்வையகம்? என் பொறுப்பையும் கடமையையும் எண்ணித்தான், என் மக்களுக்கு நிலையான அமைதியைத் தேடித் தந்தேன். எந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற அரும்பாடுபட்டேனோ, அந்தக் குழந்தைகளை அரிவாளால் வெட்டினேன். நானும் உத்தரத்தில் கயிற்றை மாட்டிக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டேன்—இன்று ஏசுகிறதே அந்தச் சமுதாயம், என்னைத் தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றிற்று"

"காண்பவர்களிடமெல்லாம் என் கதியினைக் கூறி, கண்ணீர் காட்டி, கெஞ்சி வேலை கொடுங்கள் என்று கேட்டபொழுது, 'ஐயோ பாவம் நான்கு குழந்தைகளுக்குத் தகப்பனாயிற்றே! அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை உடையவனாயிற்றே, இவனுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுப்பதன்மூலம், இவனையும் இவன் குடும்பத்தையும் காப்பாற்றுவோம்' என்று எண்ணாமல், 'எப்படியோ போகட்டும், கெட்டு அழியட்டும், நமக்கென்ன கவலை' என்றிருந்த சமுதாயந்தான், மூன்று பிணங்களும், ஒன்று குற்றுயிராகவும் இருப்பதைக் கண்டதும், என்னை ஏசுகிறது."

"என் வயிற்றைக் காட்டி, வாடி வதங்கும் குழந்தைகளின் நிலையைக் கூறி வேலை கேட்டபோது, 'சீ, போடா, வீணனே!' 'வேறு இடம் போ, இங்கு உனக்கு வேலை இல்லை' என்று கூறிய சமுதாயம், மனைவி உண்டு எனக் கூறி வேலை கேட்டபோது, 'மனைவி ஒரு!கேடா' எனக் கிண்டல் கலந்த கேலி செய்த சமுதாயம் என்னைத் தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்றிற்று—நீதி கூற முன் வருகிறது".

இவ்வாறு கூறிக்கொண்டது அவன் உள்ளம்.

மனைவியின் கண்களில் பெருகும் நீர்—குழந்தைகளின் பரிதாபக் குரல்—கருணை காட்டாத சமுதாயம்—ஆகியவை அவனை வேதனையிலாழ்த்திற்று.

மனைவி, நான்கு குழந்தைகள்—அவைகளைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும், எப்படிச் சாத்தியமாகும் என்பதால் ஏற்படும் அவநம்பிக்கையும் அவன் உள்ளத்தில் மேலும் வேதனையை உண்டாக்கிற்று.

வேலை தேடினான்—தேடினான்—எங்கும் இல்லை என்ற நிலை.

ஒரு நாள் வேலை தேடி அலுத்து வீடு வந்து சேர்ந்தான். யோசித்தான்—யோசித்தான்—மூன்று நாட்கள் யோசித்தான்.

மனைவி வயல் வேலைக்குச் சென்றுவிட்டாள். தான் பெற்ற செல்வங்கள் 'பசிக்கிறது' என்று கூறுவதற்கும் சக்தி இழந்த நிலையினைக் கண்டான். அவைகளை இந்த வேதனையோடு விட்டுவைக்க எண்ணவில்லை. தான்மட்டும் எங்காவது ஓடிவிடவோ—சாவைத் தேடிக்கொள்ளவோ அவனால் முடியவில்லை—குழந்தைகளின்மீது கொண்ட அன்பால். தான் ஓடிவிட்டால்—இல்லை—இறந்துபட்டால் அவைகளின் நிலை! இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தான். இந்தத் துன்பத்திற்கு முடிவுகட்டத் தீர்மானித்துவிட்டான். எவர் தயவும் தாட்சண்யமும் தன் முடிவிற்குத் தேவையில்லை என எண்ணினான். அதற்கான உரிமை தனக்கிருப்பதாக உறுதியான நம்பிக்கை கொண்டான். தெருக் கதவைத் தாளிட்டான். எடுத்தான் அரிவாளை! ஒன்று—இரண்டு—மூன்று—நான்கு ஆக நால்வரையும் கொன்றான். தானும் சுருக்கிட்டுக்கொண்டான்.

வேலை தேடும்போது இரக்கப்படாத சமுதாயம், குழந்தை குட்டிக்காரன் வறுமையால் வாடுவதைத் தடுக்காத சமுதாயம் தூக்குக் கயிற்றிலிருந்து அவனைக் காப்பாற்றியது.

வாடும்போது வாழ்வளிக்காத சர்க்கார் மரண தண்டனை விதித்துவிட்டது, அவனுக்கு.

கொலை செய்தான், ரங்கசாமி! ஆம், அதுதான் அவன் பெயர். தீர்ப்பளித்துவிட்டார்கள், கோர்ட்டார், மரண தண்டனை என்று.

தீர்ப்பளித்த நீதிபதி, "தந்தை என்ற முறையில் குழந்தைகளை பராமரிக்கும் பாரத்தை ஏற்றுக் கொள்ளும் சக்தி அவருக்கு இல்லை; குழந்தைகளைக் காப்பாற்றுவதில் அவர் ஓரளவு கஷ்டத்தை அனுபவித்திருக்கிறார்; அதில் அவருக்கு எரிச்சலும் ஏற்பட்டிருக்கிறது; எனவே, அவைகளிலிருந்து நழுவி தப்பித்துக்கொள்ள இக் காரியங்களை அவர் செய்துவிட்டார்" என்று கூறியுள்ளார்.

'குழந்தைகளைப் பராமரிக்கும் சக்தி அவருக்கு இல்லை' எனக் கூறியிருக்கிறார் நீதிபதி. ஏன் இல்லை? இல்லாமலா இவ்வளவு நாள் காப்பாற்றி வந்தான். சோம்பேறியா? இல்லையே! வேலை செய்யத் தயாராயிருந்தான்! குழந்தைகளைக் காக்கத் தயாராயிருந்தான், ஆனால் வேலை இல்லை. இதற்கு விளக்கம் தரவில்லை நீதிபதி.

குழந்தைகளைக் காப்பாற்றுவதில் அவர் ஓரளவு கஷ்டத்தை அனுபவித்திருக்கிறார்; அதில் அவருக்கு எரிச்சலும் ஏற்பட்டிருக்கிறது, என்கிறார். எரிச்சல் ஏற்பட்டிருந்தால் எங்காவது ஓடிவிட்டிருப்பானே. எரிச்சல் ஏற்படவில்லை, கடமையுணர்ச்சி ஏற்பட்டது. கதியற்றவன் தன் நிலைக்கு ஒருமுடிவு கட்டினான். கதியற்றநிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது—இந்த நாட்டிலே! இதற்கு விளக்கம் தருவார்களா!

'அவைகளிலிருந்து நழுவித் தப்பித்துகொள்ள இக்காரியங்களை அவர் செய்துவிட்டார்' எனக் கோர்ட்டார் தீர்ப்பளித்துவிட்டனர். நழுவித் தப்பித்துக்கொள்வதானால் அவர்களைத் தவிக்கவிட்டுவிட்டு தன்னந்தனியனாய் ஓடிவிட்டிருக்க வேண்டுமே! இல்லையே! அவர்களைத் தவிக்கவிட அவன் மனம் ஒப்பவில்லை. எனவே அவன் கொலைகாரனாக வேண்டியதாயிற்று.

தண்டனை தந்ததோடு நீதியின் வேலை முடிந்துவிட்டது. சாக இருந்தவனைத் தடுத்து, நாங்கள் சாக்காட்டுக்கனுப்புகிறோம் என்கிறது, நீதி.

தண்டனை தந்தவர்கள், நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை, வறுமையை, நல்லவர்களையும் கொலைகாரர்களாக ஆக்கிவிடும் வறுமையை ஒழிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் யார்? என்பதைக் கூறவில்லை.

மரண தண்டனையை ஏற்ற ரங்கசாமி நீதிபதி நிலையிலிருந்தால், தன்னைக் கொலைகாரனாக ஆக்கிய சமுதாயத்தையும், தன்னைப்பற்றிக் கவலையற்றிருந்த சர்க்காரையும், தான் குற்றம் செய்த பிறகு தன்னைக் குற்றம் சாட்டி ஏசும் சமுதாயத்தையும், தன்னைக் காப்பாற்ற வேண்டிய கடமை ஆளவந்தார்களுக்கு இருக்கிறது என்பதை உணர்த்தாது, தண்டனை கொடுக்க மட்டும் சக்தியுடைய சட்டத்தையும், குற்றவாளிக் கூண்டிலே கொண்டுவந்து நிறுத்தி, தன் மக்களைக் காக்க வழி வகுக்க வகையற்ற சர்க்காருக்கு, மக்கள் அனைவருக்கும் பிழைப்பளிக்கும் பொறுப்பற்ற சர்க்காருக்கு, மக்களைத் தண்டிக்க மட்டும் உரிமை எங்கிருந்து வந்துவிட்டது என்றல்லவா கேட்டிருப்பான்?

★

திருச்சி மாவட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு வேண்டுகோள்

தோழர்களே!

நமது மாவட்ட மாநாடுகள் லால்குடி, சவுந்தரபாண்டியன் அரங்கில் (லால்குடி, புகைவண்டி நிலையத்துக் கருகில்) விமரிசையாக நடத்துவதென முடிவு செய்து மாநாட்டு வேலைகள் மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

* மாநாடு கூடுகின்ற நேரம் மிக நெருக்கடியான நேரம்.

* உலக அரங்கில் ஏகாதிபத்ய வெறியர்களின் போர் முரசு.

* இந்திய அரசியல் அரங்கிலே ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் மோசடி வித்தை.

* காங்கிரஸ் சர்க்காரின் திறமையற்ற ஆட்சியின் காரணமாக நாட்டிலே, வேலையில்லா திண்டாட்டம், பசி, பஞ்சம், பட்டினி.

* எங்கும் மக்களின் வேதனைக் குரல்.

* செந்தமிழ் நாட்டில் வடவர் 'ஏகாதிபத்தியத்தின்' போரால் டால்மியாக்கள்.

* மற்றும் பல பிரச்னைகள் சூழ்ந்திருக்கும் நிலையில் நமது மாநாடு நடைபெறுகிறது.

இவைகளுக்கெல்லாம் ஒருமுடிவு கட்டவேண்டாமா? தோழர்களே! புறப்படுங்கள் லால்குடி நோக்கி. மக்கள் மத்தியில் மாநாட்டின் அவசியத்தை உணர்த்துங்கள்.

கிராமந்தோறும் திரள் திரளாக புறப்பட்டு வர ஏற்பாடு செய்யுங்கள்.

அ. பெ. தர்மலிங்கம்,
வ. கு. தலைவர்.

திருச்சி மாநாடுகளில்!

திருச்சி லால்குடியில் நடைபெறவிருக்கும் இரு மாநாடுகளிலும் நிகழவிருக்கும் சொற்பொழிவுகளின் விபரம் கீழே தரப்படுகிறது:—

முதல் நாள்

இரா. நெடுஞ்செழியன் M. A.	... மதமும்—விஞ்ஞானமும்
கலைஞர் மு. கருணாநிதி	... ஆயிரம் தெய்வங்கள்
சி. பி. சிற்றரசு	... மார்டின்லூதர்
க. அன்பழகன் M. A.	... சாக்கரடீஸ்
தாமரைச்செல்வன்	... சினிமாவும்—நாடகமும்
எஸ் கே. சாமி	... பேய்—பூதம்—பிசாசு
தில்லை—வில்லாளன்	... ஆப்ரகாம்லிங்கன்
சத்தியவாணிமுத்து	... தாமஸ்பெயின்
அருண்மொழி B. O. L.	... சமுதாய சீர்திருத்தம்

இரண்டாம் நாள்

இரெ. இளம்வழுதி M. A. B. L.	... அடிப்படை உரிமைகள்
என் எஸ். இளங்கோ	... விவசாயி பிரச்சினை
என். வி. நடராசன்	... தொழிலாளர்கள் நிலை
எ. வி. பி. ஆசைத்தம்பி	... உலக சூழ்நிலையில் திராவிடம்
ஆர். எஸ். தங்கப்பழம்	... மொழிவாரி மாகாணங்கள்
எ. கே. வேலன்	... வரலாற்றில் நாம்
கவிஞர் கண்ணதாசன்	... கலையும்—இலக்கியமும்
சி. பி. சிற்றரசு	... இன்றைய ஆட்சிநிலை
மு கருணாநிதி	... திராவிடத்தில் வடவர் ஆதிக்கம்
இரா. நெடுஞ்செழியன்	... திராவிடத்தின் வளங்கள்

ஜாதி ஒழிப்புக்குச் சட்டம்! மதப் பாதுகாப்புக்கு மந்திரி!!

[அடிகன்]

★

அண்ணன் தம்பி—இந்த இரண்டு பேரும் நமக்குத் தேவையில்லாதவர்கள்—புத்தம் புதியவர்கள்—நம் நாட்டில்வந்து குடியேறிய நாளில் இருந்து அமைதி என்ற பண்பு நம் நாட்டைவிட்டு எங்கோ ஓடி மறைந்துவிட்டது. அமைதி இங்கிருந்து சும்மாபோய் விடவில்லை — பொறாமை அழுக்காறு, சூது, வஞ்சகம், கோள், குதர்க்கம் ஆகியவற்றையும் இந்த அண்ணன் தம்பிமாரின் வாரிசு—அவைகளும் இங்கு (தமிழ்நாட்டில்) இனிமேல் இடம் பெறவேண்டியவைதான் என்று கூறிவிட்டுப் போய்விட்டது. ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் கொடி கட்டி வாழ்ந்த அமைதி இன்று இருக்கும் இடம் தெரியாமல்போய் விட்டது. உலகில் எந்தப்பகுதியில் இருக்கிறது என்று எவராலும் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. மக்களின் நல்ல வாழ்க்கை என்றால் இதுதான்—இப்படித்தான் இருக்க வேண்டுமென்பதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்த அமைதி இன்று எங்கோபோய் மறைந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது. கெட்டவனைக் கண்டால் எட்டி நில் என்பதுபோல், நல்வாழ்வுக்கு ஊறுதேடும் அந்த அண்ணன் தம்பிமார் இங்கு வந்ததும், தமிழன்னையால் போற்றி வளர்க்கப்பட்ட அருமருந்தன்ன அமைதி நம் அனைவரையும்விட்டே அகன்றுவிட்டது—'இறந்தபின் உங்களைச் சந்திக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது. இறந்த ஒருவருடைய உடம்பில் நிலவும் அமைதியைக் காணும் போதுதான், 'அந்தோ! அமைதியே நீ எங்கு சென்றுவிட்டாய்—இறந்த பின்னரா உன்பெருமையைஅறிந்து பூரிப்பது — உயிருடன் இருக்கும் போதல்லவா உன்னை நாங்கள் கண்டு களிக்கவேண்டும்' என்றகலக்கத்தை உண்டாக்கிவிட்ட அந்த அண்ணன் தம்பிமார் இருவரும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே நம்நாட்டில் உலவிக்கொண்டிருக்கிறார்கள்—இவ்வளவு பெரிய கொடுமையைச் செய்த அந்த அண்ணன் தம்பிமார் யாருக்கும் தெரியாமல் எங்கோ மறைவாக உலாவிக்கொண்டுள்ளனர் என்று நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. அவர்கள் நாட்டிலுள்ள நயவஞ்சகர் அத்தனை பேராலுமே வாழ்த்தி வரவேற்கப்படும் நிலையில் இன்றும் உள்ளனர். மக்களால் விரும்பப்படாத ஒருவர் மந்திரியாக இருந்து நாட்டை ஆள்வது போல், மக்களுக்குத் தேவையில்லாத — ஊறே உண்டாக்குகின்ற இந்த அண்ணன் தம்பிமாருக்கும் இந்த நாட்டில் நல்ல வரவேற்பும், வாழ்த்துதலும், போற்றுதலும் இருக்கிறது. இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால்; அவர்களுக்காகப் பெருந்தொகையான பொருளே செலவாகிறது. கோர்ட், போலீஸ் முதலான பொதுநல நிலையங்களின் பெரும் பகுதிக் காலம் இந்த அண்ணன்தம்பிமாருக்காகவே செலவழிக்கப்படுகிறதென்றால், அது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. அந்த அளவுக்கு அவர்களின் அட்டூழிய ஆடம்பர வாழ்க்கை, இத் தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கிறது—நாமும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்— நாமென்ன!—அரசாங்கத்தின் இசைவும் (அனுமதி) நிறையக் கிடைத்திருக்கிறதே! இப்படிப்பட்ட அண்ணன் தம்பிமார் 'யார் என்று கேட்கிறீர்களா? அவர்கள்தான் உயிரற்ற — ஆனால் ஊறு மிகவும் செய்யவல்ல உலவும் உருவங்கள் — ஜாதி, மதம் என்ற பெயரோடுகூடிய பித்தலாட்டப் பிம்பங்கள்—மமதை, வெறி என்ற பட்டப் பெயர்களைச்சூட்டிக்கொண்டுள்ள சூழ்ச்சியின் மறுவடிவங்கள். ஜாதி என்றால் மமதை, மதம் என்றால் வெறி, என்று எங்களைத்தான் எல்லோரும் அழைக்கிறார்கள்என்று தங்கள் நடவடிக்கைகளினால் அறிவிக்கும் அகங்கார உருவங்கள்.

இவைகளைத்தான் நாம் அண்ணன் தம்பி என்று குறிப்பிட்டோம்—தமிழ்நாட்டில் இல்லாதவை—தேவையற்றவை — புதியவை—வந்தவை—அல்ல அல்ல — வருவிக்கப்பட்டவை — ஒரு சாரார் தங்கள் பிழைப்புக்காகத் — தாங்கள் எங்கு சென்றாலும்—தங்களோடு கொண்டு செல்பவை — இங்கும் கொண்டு வந்துவிட்டார்கள் என்று கூறுகிறோம்.

பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் என்ற பெறற்கரிய பெரும் பண்பாட்டைப் பெற்றுள்ள இத்தமிழ் நாட்டில், பிறப்போக்கும் எல்லா ஜாதிக்கு என்ற பொறுத்திடுதற்கரிய பெரும் பிழையை—அல்ல—பெருங் கொடுமையைச் செய்தவர்கள் யார் என்பதை,

> “பிராமணர்களால்தான் ஜாதி இருக்கிறது என்று நினைக்கக் கூடாது”

என்று 22—3—53-ல் சென்னையில் நடைபெற்ற சாதி ஒழிப்பு மாநாட்டில் பேசிய முன்னாள் சுயமரியாதை மாநாட்டுத் தலைவரும் இடைநாள் அமைச்சரும்—பின்னாள் காங்கிரஸ் கமிட்டித் தலைவரும்—இன்னாள் எந்தப்பதவி எனக்குக் கிடைக்கும் என்று ஏங்கி எதிர்பார்த்து நிற்பவருமான நமது நண்பர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் சிறிது சிந்தனைக்கு வேலைகொடுத்து பார்க்க வேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகிறோம்.

பிராமணர்களால்தான் ஜாதி இருக்கிறதென்பதை விரும்பாத டாக்டர் சுப்பராயன் அவர்கள், இந்த ஜாதி யாரால் இருக்கிறதென்பதற்கு ஒரு விளக்கம் கூறியிருக்கிறார்—அதுதான் வேடிக்கையும் வியப்பும் நிறைந்ததாகும்.

படையாட்சி, நாடார் முக்குலத்தோர், வேளாளர் ஆகிய இவர்களே ஜாதியின் உயர்வைப் பற்றிப் பேசுபவர்களும், ஜாதி இருக்கவேண்டுமென்று விரும்புபவர்களும் ஆவார்கள் என்பது சுப்பராயன் அவர்களின் கருத்தாகும்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் அடிப்படை உண்மை ஒன்றை மறந்துவிட்டோ அல்லது தெரியாமலோதான் இப்படி எல்லாம் பேசியிருக்கிறார் என்று எண்ணுகிறோம்.

'ஜாதி' என்ற சொல்லே தமிழ் மொழியில் கிடையாது. இது அவருக்குத் தெரியுமோ என்னவோ! தெரிந்திருந்தால் இந்தக் கலப்படமற்ற பொய்யை ஒரு மாநாட்டு மேடையில் நின்றுகொண்டு பேசியிருக்கமாட்டார்—அதிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கக் கூடிய அறிவாற்றல் படைத்தவர்—தமிழர்—தன் இனத்தையே இழிவுபடுத்திப் பேசியிருப்பது உண்மையிலேயே வருந்தக்கூடிய ஒன்றாகும்.

இன்று, தங்களைப் படையாட்சி என்றும், நாடார்என்றும், முக்குலத்தோர் என்றும் கூறிக் கொள்ளும் நிலைமை யாரால்—எப்படி உண்டாயிற்று என்பதனையன்றோ எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

ஜாதியே இல்லாத நாட்டில்—ஜாதி என்ற சொல்லே இல்லாத மொழியைப் பேசுவோரிடத்தில் ஜாதி என்ற ஆணவம் எப்படி உண்டாயிற்று? யாரால் உண்டாயிற்று? எந்தக் காலத்தில் உண்டாயிற்று? என்ற இத்தகு உண்மைகளை டாக்டர் சுப்பராயன் அவர்கள்—தமது 14-வது வயதிலேயே தம்மைப் பறையன் என்று பள்ளிக்கூட உபாத்தியாயரிடம் கூறுமளவுக்குத் துணிச்சல் பெற்றிருந்த இளஞ் சுப்பராயன் — அறிவிலும் ஆண்டிலும் முதிர்ந்த இந்நாளில் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறார் என்றே புரியவில்லை.

நாங்கள் படையை ஆண்டோம், எனவே நாங்கள் படையாட்சி. நாங்கள் நாட்டை ஆண்டோம், எனவே நாங்கள் நாடார். நாங்கள் இந்நாட்டின் பழங்குடிகள், எனவே நாங்கள் முக்குலத்தோர் அதாவது முதற்குலத்தோர் என்று அவர்கள் கூறுவது காரணப் பெயராக இருப்பதால் நாமும் ஒப்புக் கொள்ளவேண்டி இருக்கிறது. இது எப்படியோ போகட்டும். பெரிய ஆராய்ச்சிக்குரிய ஒன்றை ஏன் இந்தச் சிறிய நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பேசவேண்டும்?

பிராமணன்—க்ஷத்திரியன் — வைசியன்—சூத்திரன் என்பதுதான் ஜாதியே யன்றிப், படையாட்சியும், நாடாரும், முக்குலத்தோரும் கவுண்டரும் பிறரும் வெவ்வேறு ஜாதியினராகார் என்ற உண்மையை நண்பர் சுப்பராயன் அவர்கள் ஏன் தெரிந்துகொள்ளவில்லை என்பதுதான் தெரியவில்லை.

இத்தமிழ்நாட்டில் நான்கு ஜாதியை நிலைநாட்டியவர்கள்—வேரூன்றச் செய்தவர்கள் யார்? தெரியாதா டாக்டருக்கு! தெரியும். ஆனால், தெரிந்ததை—அறிந்ததை—உண்மையென்று பட்டதைப் பேசும் பண்பைத்தான் இந்தச் சாதித் திமிரும், மதப் பித்தமும் ஒழித்துக் கட்டிவிட்டனவே! சாதி, மதங்களுக்குக் கட்டுப்படாதவர்களிடம் தானே ஓரளவுக்கு உண்மையை மறைக்காமல்பேசும் பண்பைக்காண முடிகிறது. 'அன்பே கடவுள்—இதுவே காந்தியடிகள் சொன்ன வழி' என்று அழகாகப் பேசிவிட்டு, ஆண்டவனைத் தேடி ஆலயத்துக்குள் நுழையும் “அறிவாளிகளி”டம்—அதாவது அவர்கள் அகராதிப்படி அஞ்ஞானிகளிடம் உண்மை என்ற உயர்ந்த பண்பை எப்படி எதிர்பார்க்கமுடியும்! இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்றவாறு தங்கள் கருத்துக்களை முன்னுக்குப்பின் முரணாகப் பேசிக்கொண்டு திரிவது தானே இவர்கள் வழக்கம்—ஜாதி மதப் பாதுகாவலர்களின் அடிப்படைப் பண்பு!

ஜாதி ஒழிப்புக்கு அடிகோலியவர் டாக்டர் அம்பேத்கார் அல்ல, காந்தியடிகள் தான் என்பதை நிலைநாட்டப் பார்க்கிறார் சமய சஞ்சீவியான காங்கிரஸ் பக்தர் டாக்டர் சுப்பராயன்.

ஜாதி ஒழிப்புத்திட்டம் அம்பேத்காரால் ஏற்பட்டால் என்ன! காந்தியாரால் ஏற்பட்டால் என்ன! ஜாதி ஒழிய வேண்டுமென்பதில் கவலையும் கருத்தும் கொண்டுள்ளவர்கள், காந்தி சொன்னால் ஆதரிப்போம், அம்பேத்கார் கூறினால் எதிர்ப்போம் என்று தங்களுக்கிருக்கும் குறைமதியைக் காட்டிக் கொள்ளமாட்டார்கள். பதவிக்காகக்கொள்கையை உதறி விட்டுக்கட்சிமாறும் கனவான்கள், ஜாதிஒழிப்புப்போன்ற உயர்ந்த கொள்கைகளில் தலையிடாமல் இருப்பதுதான் அறிவுடைமையாகும். தவறித்தலையிட்டாலும் வழுக்கி விழாமல் இருக்க வேண்டுமென்பதுதான் எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

ஜாதியை ஒழிக்கச் சட்டம்! மதத்தைப்பாதுகாக்க மந்திரி! இந்தவிசித்திரத்தைஇங்கன்றி வேறெங்குதான் காண முடியும்! ஜாதியின் பாதுகாவலன் மதம்—மதத்தின்பாதுகாவலன் ஜாதி. இந்த நிலையில், மதத்தைப் பாதுகாப்பவர்கள் ஜாதியை ஒழிக்கப் பாடுபடுகிறார்கள்—இல்லை! இல்லை!! பாசாங்கு செய்கிறார்கள்.

மதத்தைப் பாதுகாத்துக் கொண்டு, ஜாதியை ஒழிக்க முனைவது நிழலை அளப்பது போலவும், நீரைக்கழுவுவது போலவும் தான் முடியும். இதனை ஜாதி ஒழிப்பில் ஈடுபட்டுள்ள மதப்பாது காவலர்கள் நன்கு எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

ஒருவன் தன்னுடைய நிழலை அளக்கமுயன்று, அந்தநிழல் அவன் அளக்க அளக்க அளவில் குறையாமல் போய்க் கொண்டிருந்ததாம். அந்த அளவு அறிவுப்பஞ்சத்தோடு தனது நிழலை அளந்தறிய முயன்றவனைப்போல் ஜாதி ஒழிப்பில் ஈடுபட்டுள்ள மதப் பாது காவலர்களுக்கும் அறிவுப்பஞ்சம் ஏற்பட்டு விட்டது. தான் நடக்க நடக்கத் தன்னுடைய நிழலும் தனக்கு முன்னே போய்க் கொண்டுதான்இருக்கும் என்பதனை அறியமுடியாதவனைப்போல், மதத்தை நாட்டில் நடமாட விட்டுக் கொண்டு, ஜாதியை ஒழித்துக்கட்டி விடுவோம் என்பவர்களுக்கும் மதம் இருக்கும் வரையில் ஜாதியைஒழிக்க முடியாது என்பதை அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு அறிவுப் பஞ்சம் ஏற்பட்டிருப்பது நன்றாகத் தெரிகிறது.

மன்றம்

(திங்கள் இருமுறை)

★

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

துவக்கம் 1-5-53-ல்

கதை, கவிதை, கட்டுரை, அரசியல் குறிப்புகள், வரலாற்றுச் செய்திகள், விஞ்ஞானப் பகுதி இன்ன பிற சீரிய முறையில் மிளிரும்.

முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

முன் பணம் இதழ் ஒன்றுக்கு ரூ. 1.

10 இதழ்களுக்கு மேல் வாங்குவோர்க்கே விற்பனை உரிமை தரப்படும்.

கட்டண விவரம்:—

ஆண்டுக் கட்டணம்	ரூ 6–0–0
ஆறுமாதம்	ரூ 3–0–0
தனி இதழ்	ரூ 0–4–0

விபரங்கட்கு:—
நிர்வாகி, 'மன்றம்'
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி சென்னை–1

விற்பனைக்குத் தயார்

கலைஞர்

மு. கருணாநிதியின்

நாடும் நாடகமும் (புதிது)	1—0—0
விடுதலைக் கிளர்ச்சி	1—0—0
பூந்தோட்டம்	0—4—0
“நாம்” கதை-வசனம்	0–8–0

அச்சில் பரப்பிரம்மம் (நாடகம்)
(மு. கருணாநிதி)
உடைந்த ஆசை (சிறுகதைகள்)
(அரங்கண்ணல்)

திராவிடப்பண்ணை,
தெப்பக்குளம் திருச்சி.

திசை, திருப்புகிறார்!

★

பாலம் கட்டினார்கள் புதிதாக—சில நாள்கூட ஆகவில்லை; தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விட்டது!

*

தனது 'சர்டிபிகேட்' வேண்டுமென்று ஒரு ஆசிரியர் பரீட்சை கமிஷனருக்கு எழுதிப் போட்டார், ஆண்டுகள் இரண்டாகிவிட்டன—பதிலே, கிடையாது!

சட்டசபை விவாதத்தின்போது சர்க்காரின் நிர்வாக ஊழல்களைப் பற்றி, இதுபோலப் பலப்பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கின்றனர், உறுப்பினர்கள்.

காரியங்கள், விரைவாக நடப்பதில்லை.

வீண் தாமதமும்—ஊழலும் வளர்ந்து வருகிறது, என்பதே, இவ்விதம் விபரப்பட்டியல் தருவோரின் கருத்தாகும்.

இவ்விதம் குறைகள் கூறப்பட்டால், 'அவைகளைக் கவனித்து ஆவன செய்கிறேன்' என்று பதிலளிக்கவேண்டிய முதலமைச்சரோ, சீறுகிறார். சர்க்கார் உத்யோகஸ்தர்கள் மீது பிறர் பழி சுமத்துவது போலவும், அதனை மறுக்கும் 'வக்கீல்' போலவும், மாறுகிறார்.

சர்க்காரின் திறமைக் குறைவைப் பற்றிக் குறை கூறினால், உடனே அது, அதிகாரிகளைக் குற்றம் சாட்டுவதாகும் என்று குதித்துக் கிளம்புகிறார். ஆலமரம் பட்டுவருகிறது!—என்றால், 'செச்சே! அவ்விதமா, சொன்னாய்? ஆலிலைகளைக் குறை கூறலாமோ!' என்று, வீண் சண்டைக்கு வரும் விசித்திர மதியினன் போல், சர்க்காரின் நிர்வாகத் திறமையைப்பற்றிக் குற்றம் சாட்டினால், அது அத்தனையையும் உத்யோகஸ்தர்கள் தலையில் கொண்டு போய் வைக்கிறார்.

இவ்விதம், உத்யோகஸ்தர்களுக்காகப் பரிந்து பேசுவதும், ஆதரவு காட்டுவதும் அவசியம் — மறுக்கவில்லை நாம். ஆனால், சர்க்காரின் நிர்வாக இயந்திரத்தின் அச்சாணி போலுள்ள சர்க்கார் சிப்பந்திகள், தம்முடைய குறைகளைச் சொன்னால், மிரட்ட ஆரம்பித்துவிடுகிறார்! தஞ்சை போன்ற இடங்களில் சர்க்கார் சிப்பந்திகளின் மனைவிகளே, தங்கள் குடும்பத்துக்குப் போதிய ஊதியம் தேவையென்று தீர்மானம் நிறைவேற்றியதை அறிவோம், நாம்! இதே காங்கிரஸ் ஆட்சியில், அவர்கள் முன்னிருந்த முதலமைச்சர்களால் வதைக்கப்பட்டதையும் அறிவோம்! சர்க்கார் சிப்பந்திகளைப் போலீஸ் படை விரட்டிய அதிசய நிகழ்ச்சியையும் இந்த 'அன்பானந்தர்'களின் ஆட்சியிலே கண்டிருக்கிறோம்!

ஆனால், குயுக்தியே தனது மூலபலமெனும் கருத்திலிருக்கும் முதலமைச்சர் ஆச்சாரியார், சர்க்காரின் நிர்வாகத் திறனைப்பற்றி, நம்போன்றோர் கண்டித்தால், அது சர்க்கார் சிப்பந்திகளைக் கண்டிப்பதாகுமெனும் கருத்தில், ஓடோடியும் வருகிறார், வாதிட! வம்பிழுக்க!!

சர்க்கார் திறமைக் குறைவுக்குக் காரணம், ஏழை சிப்பந்திகள் என்று பழி வீசும் பித்துமதி கொண்டோரல்ல, நாம். அவர்கள் ஆட்டி வைத்தால் ஆடுபவர்கள்! சொல்வதைச் செய்பவர்கள்—தருவதைப் பெற்றுச்செல்லவேண்டிய நிர்ப்பந்த நிலையிலிருப்பவர்கள்.

சர்க்காரின் திறமைக் குறைவுக்கு அவர்கள்மீது பழிபோடமுடியாது. அவர்களுக்கு அடுத்த பதவியிலிருக்கும் மேலதிகாரிகளையும், நாம், அவ்வளவு எளிதில் பழி வீசிட முடியாது.

ஆனால் அவர்களுக்கும் மேலாக, சர்க்காருடைய முக்கிய விசைகளாக சில அதிகாரிகள் இருக்கிறார்கள். தாமதம் — வீணாகக் காலங்கடத்துதல்—செய்வன திருந்தச் செய்யாமை—முதலிய குற்றச்சாட்டுகளை அவர்கள்மீது போடலாம்.

ஆனால், அவர்களையும், தீர்மானமாக நம்மால் குறைகூற முடியாது.

இன்று அமைச்சர்களுக்கு அடுத்தபடியாக அமர்ந்திருக்கும் பல அதிகாரிகள், வெள்ளையன்கால முதல் சர்க்கார் இயந்திரத்தைத் தள்ளி வருபவர்களாகும். எனவே, அவர்களை பிஞ்சில்பழுத்ததென்றோ, நெஞ்சில்திறமையற்றதென்றோ,கூறிவிடமுடியாது. நிர்வாகப் புலிகள் பலர் இருக்கிறார்கள்! இத்தனை மந்திரிகளையும் போகச் சொல்லிவிட்டு இரண்டு மூன்று பேர்மட்டும் 'செகரட்டேரியட்டில்' இருந்தபடி இம்மாகாணத்தை ஆளும் திறமைபடைத்தவர்களும் இருக்கிறார்கள்!

எனினும், இன்றைய சர்க்காரில் அன்றன்றாட ஊழல்கள்கூட, ஏனின்னும்களையப்படமுடியவில்லை? ஜனநாயக யுகம் மலர்ந்திருக்கிறது! நாம் யாவரும் மக்கள் மன்றத்துக்காகப்பாடுபடுபவர்கள் என்கிறஎண்ணம் இந்த உயர்தர அதிகாரிகளின் உள்ளத்தைக் கவராததன் காரணம் என்ன! காலையிலெழுந்தேன் — ஆபீஸ்போனேன்—திரும்பினேன்' என்று பழைய சக்கரம் சுற்றுவது போல அவர்கள் நடமாடுகிறார்களே ஒழிய, புது எண்ணங்கள் மலரவில்லை! நமது சர்க்கார்—நாம் மக்களுக்காகப்பாடுபடுவர்கள் என்கிற எண்ணமே, அரும்பவில்லை.

மேலதிகாரிகளுக்கு இந்தப் பொறுப்பு ஏற்படாமைக்குக் காரணம், காங்கிரஸ் அமைச்சர்களேயாகும்.

"இது ஜனயுகம்! நாம் தவறு செய்தால் மக்கள் சும்மாவிடமாட்டார்கள்!"

இந்த பயம், ஆட்சிப்பீடமேறிய அமைச்சர்களுக்கே ஏற்படமுடியாமற்போயிற்று. 'ஏதோ, மந்திரியானோம்' என்கிற அளவிலேயே, இருந்து வருகிறார்கள். இந்த நிலை, சர்க்காரின் மேலதிகாரிகளிடத்திலும் எதிரொலிக்க ஆரம்பித்துவிட்டது—அவர்களும் புதுப்பொறுப்பினை உணரத் தவறுகிறார்கள்.

அமைச்சர்கள் வேறு சிலரோ, சேர்மாதேவி காங்கிரஸ் எம்.எல்.ஏ. சி. பாண்டியன் கூறியதுபோல, "மந்திரிகள் தலைமை குமாஸ்தாக்கள்போல கையெழுத்துப் போடுவதோடு இருந்து வருகிறார்கள்"

இதனைக் காணும், உயர்தர உத்யோகஸ்தர்களுக்கு, கையெழுத்துப் போட ஒரு ஆசாமி இருக்கிறார் — அவர்தான் மந்திரி — என்கிற அளவிலேயே, அமைச்சர்களைப்பற்றிய கருத்துப்பரவி விடுகிறது.

இதனாலும், ஜனயுகத்தின் பொறுப்புகளை மறந்துவிடுகிறார்கள்—சிலர் வழி தடுமாறவும் செய்கிறார்கள். அன்றாடம் வாழ்வுக்கு அல்லாடும் ஒரு சாதாரண சிப்பந்தி, கொஞ்சம் வழி தவறிப் போனாலும் கொட்டுகிறது சட்டம்! ஆனால், பெரிய அதிகாரிகளிடமோ, சட்டம் அவ்வளவு வேகமாக ஓடமுடியவில்லை!

இதற்குக் காரணம், அரசு, தெளிவில்லாததுதான்—திறமையும், தான் என்ன செய்யப்போகிறோம் என்கிற திட்டமான கொள்கையும் கொண்ட ஓர் அரசியல், எவராலும் எதுவும் செய்யமுடியாது. பொறுப்பு வளரும்! நன்மைகள் மிளிரும்!!

'நம்ம' சர்க்காரின் அரசு, 'அதிகாரம் என்னிடம்' என்று காட்டிக்கொள்ள இருக்கிறதே யொழிய, புதுப்பாதையின் ஓரத்தைக்கூடக் காட்டித் தரவில்லை.

இத்தகைய அரசைத்தான், நாம் குற்றம்சாட்டுகிறோம் — திறமை இல்லை! ஊழல் அதிகம்!! என்றெல்லாம்.

ஆனால் ஆச்சாரியார், நமது குற்றச்சாட்டுகளையெல்லாம் சர்க்கார் சிப்பந்திகள்மீது போடப்பார்க்கிறார்—அவர்களுக்கு 'வக்காலத்து' வாங்குவதுபோல.

ஆச்சாரியார் ஓரளவு நிர்வாக நுட்பங்களை உணர்ந்தவரெனக் கருதப்படுபவர். அவரே, மேலதிகாரிகளை 'தட்டி'க் கொடுக்கவேண்டிய சூழ்நிலையிலிருக்கிறார்.

(அடுத்த பக்கம் பார்க்க)

★ தூங்கிய தோழருக்கு! ★

ஆனந்த சயனம்!

—எங்கே?

அசெம்பிளியில்!

—எப்போது?

பட்ஜட் விவாதத்தின்போது!!!

—யார் அவர்?

சாட்சாத் காங்கிரஸ் M.L.A.தான்!

—என்றைய தினம்?

இதோ செய்தி: மித்திரனில் வந்தது

*

சென்னை, மார்ச் 24.

நேற்று பிற்பகல் அசெம்பிளியில் சொகுசான மெத்தையில் குஷியாகக் காலை நீட்டிக்கொண்டு சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தார், ஒரு காங்கிரஸ் மெம்பர் தம் இலாகா மான்யக் கோரிக்கை பற்றிய விவாதத்துக்கு ரெவின்யூமந்திரி பதிலளித்துக் கொண்டிருந்த சமயம் அது. அனந்தசயனக் காட்சியைக் கண்ட சபாநாயகர், மந்திரியின் பேச்சை நிறுத்தச் சொல்லி பிரஸ்தாப மெம்பரை எழுப்பச் சொன்னார். ஆனந்த நித்திரையில் ஆழ்ந்திருந்த அந்த மெம்பர் அலறியடித்து எழுந்தார். கண்ணைக் கசக்கிய வண்ணமே சிறிது நேரத்தில் சபையைவிட்டு வெளியேறினார்.

*

சொகுசான மெத்தை

குஷியாகக் காலை நீட்டிக்கொண்டு

சுகமாக

ஆனந்த நித்திரை

இவ்வளவு 'அழகாக' தூங்கியிருக்கிறார். காங்கிரஸ் எம். எல். ஏ. 'அசெம்பிளியில் ஆனந்த சயனம்!' என்று அழகான தலைப்புக் கொடுத்துப் பிரசுரித்திருக்கிறது, 'சுதேசமித்திரன்' எவ்வளவு ஆனந்தம் பாருங்கள்! சொகுசான மெத்தையாம் குஷியாகக்காலை நீட்டிக்கொண்டாராம்—சுகமாக ஆனந்த நித்திரை செய்தாராம்—காங்கிரஸ் எம்.எல்.ஏ.

அந்த 'நபர்' யாரென்று புகைப்படம் எடுத்துப் போடவில்லை, தேசிய ஏடு. மானம், கப்பலேறும் என்கிற அச்சம்போலும்! சபையில் மக்கள் செலுத்தும் வரிப் பணம் பற்றிய வரவு செலவு, வகுக்கப்படுகிறது. மக்களின் தூதரோ 'மகானந்தம்' அனுபவிக்கிறார்! சுகமாக—குஷியாக – சொகுசான மெத்தையில்—ஆனந்தசயனம் செய்கிறார்!!

உலகில், பார்லிமெண்டு நடவடிக்கைகளைப்பற்றி, தினசரி படிக்கிறோம். எங்கும் கண்டதில்லை, இத்தகைய அதிசயத்தை. ஜப்பான் சட்டசபையில் ரகளை — பிரிட்டனில் சர்ச்சில் திணறினார் — பிரான்சில் அமர்க்களம்—என்பனபோன்ற செய்திகளையே காண்கிறோம். இங்கோ, ஆனந்த சயனம்! அனுபவிக்கிறார், மக்கள் தூதர்!!

பாபம்—அவரையும் குறை கூறுவதற்கில்லை. வயிறு நிறையச் சாப்பிட 'அலவன்சும்' கொடுத்து, வாகன வசதியும் தந்து, குளிர்ச்சியான கடற்காற்று மோத, போதாதற்கு மின்சார விசிறி வேறு சுழல, சொகுசான மெத்தையும் இருந்தால், அவர் தூங்காமல் என்ன செய்வார்?

'மெத்தை! காற்று! — இத்தனை வசதிகளிருந்தாலும், 'ஆனந்தசயனத்தில்' ஈடுபடாமல், பல எதிர்க்கட்சியினர் அட்டகாசம் செய்கின்றனரே!'—என்று, கேட்கத் தோன்றலாம். அவர்கள், அப்பாவிகள்! எம். எல். ஏ.க்களென்றால் மக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்கிற 'துரோக' எண்ணங்கொண்டவர்கள்! வாழத் தெரியாதவர்கள்!!

உரத்த குரலெழுப்பவும், உண்மையை யெடுத்துரைக்கவும், மக்கள் நிலையைப்பற்றிப் பேசவுமா, இவர், எல். எல். ஏ-ஆனார்! இல்லையே — அந்த 'வீண்வேலை'களெல்லாம் அசெம்பிளியில் இருக்குமென்றால், அவர் காங்கிரஸ் சார்பில் சட்டசபைக்கு வருவாரா? — காங்கிரஸ் சார்பில் வந்தால்தானே, 'தூக்கு!' என்றால் கைதூக்கவும் (யாராவது அப்போதெல்லாம் எழுப்பிவிட்டு விடுவார்கள்) 'போடு' என்றால் கீழே போடவுமான, வேலையோடு, 'தொல்லை' முடிந்துபோய்விடும். அதனால்தானே, 'மாடு'பெட்டியைப் பெற்றார்! பெறப் பணம் செலவழித்தார்!!

எதிர்க் கட்சியிலிருந்தால், இது என்ன? அது எப்படி? ஏனிந்தச் செலவு? — என்றெல்லாம், பேசவேண்டும். காங்கிரஸ் கட்சியிலிருந்தால், அத்தொல்லையே கிடையாதே! "பேசவேண்டியதேயில்லை, எல்லாம் எங்கள் கட்சிக்கட்டுப்பாடு" என்று, சுலபமாகக் கூறிடலாம்—எவராவது கேட்டாலும். இந்தச் சவுகரியம் 'காங்கிரசை'த் தவிர, வேறெங்காவது உண்டா!

'ஆனந்தசயனம்' கொண்ட, அந்த அன்பரை நாம் குறைகூறவில்லை. வாழ்த்துகிறோம்! அன்பரே அருமை எம். எல். ஏ.வே — உலக விசித்திரத்துக்கு எடுத்துக் காட்டானீர் — கடந்த சட்டசபையின் 'புகழை'க் காக்கும் பரம்பரையைக் கைவிடாத உமது பண்பு வாழ்க! அடுத்தமுறை காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கூடினால், 'சட்டசபை மண்டபத்தில் காங்கிரஸ் மெம்பர்களுக்கெல்லாம் தலையணைகள் வேண்டும்' என்று தீர்மானம் கொண்டுவருக! விரும்பியதைப் பெற்று, ஆனந்த நித்திரையிலீடுபடுக! — வீணாக, விழித்துக் கொண்டு கொட்டாவி விடுவதைவிட, தூங்குவது நல்லது—மனிதன் தூங்கத் தூங்க, அழகு அதிகமாகுமாம்! ஆகவே, அஞ்சாதீர்! அப்படி விழித்திருந்தாலும்தான் காங்கிரஸ் எம். எல். ஏ.வான நீர், உமது சர்க்காரை எதிர்த்து, ஒரு வார்த்தை சொல்லத்தான் போகிறீரா? சொல்லும் துணிச்சல் வந்தால், அந்தக் 'கொசுக்கூடாரத்தில்'தான் கிடப்பீரா? தொடர்வீர், உம் திருப்பணியை! உலக அதிசயத்தை அதிகப்படுத்துவீர்!!! நன்றாகத் தூங்கும் — முதலமைச்சரிடம் கூறி ஆஸ்தான வித்வான் நாமக்கல்லாரைக் கொண்டு 'ஆராரோ' பாட்டெழுதச் சொல்லி — டில்லி ஆஸ்தான வித்வான் செம்மங்குடி சீனுவைக் கொண்டு பாடவைத்து 'கிராமபோன்' மூலம் கீதம் பெறும் வழிவகைகளைச் செய்து, தூங்காது தூங்கி சுகம் பெறுவீராக! ஜெய்ஹிந்த்!!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான அந்த உரிமையைத் தர மறுக்கிறது.

மறுப்பதுமட்டுமல்ல—நமது ஏடுகளை மக்கள் மத்தியில் பரவாமற் செய்ய என்னென்ன வழிகளுண்டோ, அத்தனையையும் செய்யத் தவறுவதில்லை, சர்க்கார்.

முனிசிபாலிடிகள்

பஞ்சாயத்துக்கள்

பொதுநூல் நிலையங்கள்

முதலியவைகளில் நமது ஏடுகள் வைக்கப்படக்கூடாதென்று, சர்க்காரே கட்டளை பிறப்பித்திருக்கிறது, நமது ஏடுகள்—தீண்டத்தகாதவையாம்! அங்கே இடம் பெறக்கூடாதாம்!!

இந்த உத்தரவு, காங்கிரசினர் ஆட்சிப்பீடம் ஏறிய நாள் முதல், அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

சிறு கண்டனம் எழுப்பியதுண்டா, இந்தத்தேசீய ஏடுகள்? பத்திரிகா தர்மம்,பேசுகின்றனவே, எங்கே தூங்கின இத்தனைநாளும்? நாமும்தான் வரி செலுத்துகிறோம்—ஆனால் நமது ஏடுகள் சர்க்காரின் உதவி பெறும் இடங்களில் இருப்பது தகாதாம்! கூடாதாம்!!

இது, சென்னையில்!—'சென்னை'யின் போக்கைப்பற்றிச் சிறிதும் பேசவில்லை இத்தேசிய ஏடுகள்.

இப்போதுமட்டும் 'பம்பாய்'க்கு புத்தி கூறுகின்றன. கண்டனம் தெரிவிக்கின்றன.

அநீதி எங்கு இருந்தாலும்அதனைக் கண்டிக்கும் மன உறுதி வேண்டும்.

இந்தச் சராசரி மனிதத்தன்மையையும் இழந்துவிட்டோர், தர்மம் போதிக்கிறார்கள் — 'பூப்போட்ட கிளாஸ்' ஏந்தியவன், வீதியில் தள்ளாடுவோனைக் கேலி செய்கிறான்!

*

தமக்கு வேண்டியவர்களை ஆதரிப்பதும், வேண்டாதவர்களை வெறுப்பதுமான மனோபாவம், மனிதராய்ப் பிறந்தோர்க்கு இருத்தல் ஆகாது. அதுவும், பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்போருக்கு, இம்மியளவும் இருப்பது கூடாது.

இந்த அடிப்படையை மறந்து தேசாய் கர்ஜிக்கிறார்—வந்தேமாதரம் கசக்கிறது அவருக்கு.

அதனை எடுத்துக் கண்டிக்கமுன் வந்த சென்னை ஏடுகளோ, 'முழுப் போதை'யில் கிடக்கின்றன.

ஒன்று திமிர்ப் போதை! மற்றொன்று வஞ்சகப் போதை!!

இந்தப் போதைகள் ஒழிந்து, மதிமயக்கம் தெளிந்தால்தான் நியாயம் வளரும்.

தானே சாக்கடையில் கிடந்து கொண்டு, மற்றவனைக் குறை கூறுவது கேலிக்குரிய செயல்.

பம்பாயைக் கண்டிக்க முன்வந்த பத்திராதிபர்கள், 'சென்னை'யின் பக்கம் பேனாவைத் திருப்புவார்களா?—அதற்கான நெஞ்சுரம் ஏற்படுமா?

*

(முன் பக்கத் தொடர்ச்சி)

காரணம் — பழைய மிஷின்! அதனை ஓட்ட, அவர்களால்தான் முடியும். ஆகவே, அதனை அனுசரிக்க வேண்டியவரானார்.

பழைய மிஷின் மாற்றப்பட வேண்டும்—அப்போதுதான் நிர்வாகம் சீர்படும். பழைய மிஷின்—ஆட்களையல்ல நாம் குறிப்பிடுவது, சர்க்கார் இயந்திரத்தை.

அதிகமான சம்பளம்-குறைவான வேலை — மெருகுக்காகச் சிலபதவிகள்—என்கிற நிலைமாறி, அரசைநிர்வகிக்கும் தலைவர்கள் திடமான கொள்கையுடையவர்களாயிருந்தால், குறைகள் நீங்கும்.

சர்க்காரின் ஊழல்களையும் நிர்வாகத்திறமையையும் நம்போன்றார் குறிப்பிடும்போது, 'மாடல் மாறாத' காங்கிரசாட்சியைக் குறிப்பிடுகிறோமேயொழிய, சிப்பந்திகளை அல்ல.

★

திருச்சி, அழைக்கிறது—திராவிட, வீரர்களை

லால்குடி திரண்டு வாரீர்! பாண்டியனார் அரங்கில்

திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

25-4-53 சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: அ. பொன்னம்பலனார் | திறப்பாளர்: இராமாமிர்தத்தம்மையார்

26-4-53 மாவட்ட இரண்டாவது தி. மு. க. மாநாடு

தலைவர்: ஈ. வி. கே. சம்பத் | திறப்பாளர்: கே. ஏ. மதியழகன்

சொற்பொழிவாளர்கள்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, எஸ். கே. சாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், என். வி. நடராசன், இராசு-தங்கப்பழம், தில்லை—வில்லாளன், அரங்கண்ணல், தாமரைச்செல்வன், இளம்வழுதி, கண்ணதாசன், சத்தியவாணிமுத்து, பூங்கோதை, அருண்மொழி.

கலைக் கண்காட்சித் திறப்பாளர்

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி

கலைச் சொற்பொழிவாளர்கள்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி-கணேசன்

இன்னிசை: இசை முரசு நாகூர் அனீபா, செல்லமுத்து

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டசபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

இரண்டு நாட்களிலும்

அண்ணாதுரை, கருணாநிதி, கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கும்

"சந்திரோதயம்" "காதல்ஜோதி"

நாடகங்கள் நடைபெறும்.

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகம் உள்பட) ரூ. 5, 2, 1. பெண்கள் அணா 8.

டி. பி. அழகமுத்து, பொருளாளர். எம். எஸ். மணி-ஜி பராங்குசம், செயலாளர்கள். அம்பில் தர்மலிங்கம் வ. கு. தலைவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.